வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.5271/ஆ1/2023 நாள் 12.01.2024

---

பொருள் : பள்ளிக் கல்வி – தேசிய ஆசிரியர் நல நிதியம் – கல்வி உதவி தொகை – தமிழ்நாடு தொழில்நுட்ப பயிலக பட்டயப் படிப்பு / பட்டப்படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 2023–2024ஆம் கல்வியாண்டிற்கு படிப்பு உதவி தொகை வழங்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோருதல் சார்பு.

பார்வை :
1. அரசாணை நிலை எண்.169/ பள்ளிக் கல்வித் துறை நாள் 03.10.2023
2. சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.064404/ ஐ/இ1/2023 நாள் 20.12.2023

---

பார்வை 1இல் காணும் அரசாணையின்படி அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பணிபுரியும் / ஓய்வு பெற்ற / பணியிலிருக்கும் போது இறந்த ஆசிரியர்களின் குழந்தைகள் மற்றும் தொழில்கல்வி ஆசிரியர்களின குழந்தைகளுக்கு (ஒரு ஆசிரியருக்கு ஒரு குழந்தைக்கு மட்டும்) இணைப்பு 1இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் உயர் கல்வி பயிலுவதற்கு கல்வி கட்டண தொகை தொழிற்கல்வி பட்டயப் படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும் உயர் கல்வி கட்டண தொகை (Tuition fees) அல்லது ரூ.50,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை மற்றும் தொழிற்கல்வி பட்டயப் படிப்பு பயில கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்படும், கல்வி கட்டண தொகை (Tuition fees) அல்லது ரூ.15,000/– இவற்றில் எது குறைவோ அத்தொகை தேசிய ஆசிரியர் நலநிதியில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து உயர் கல்வி கட்டணத் தொகையை வழங்கப்படவேண்டும் என ஆணை வழங்கப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு தேசிய ஆசிரியர் நல நிதியிலிருந்து தொழில்நுட்பக் கல்வி பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு பயிலும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு 2023–2024ஆம் கல்வி ஆண்டிற்கான கல்வி உதவி தொகை வழங்கிடும் பொருட்டு திருத்திய படிவம் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. இப்படிப்பு உதவி தொகை பெறும் விவரம் சார்ந்து அனைத்து ஆசிரியர்களும் அறியும் வண்ணம் பள்ளிகளில் உள்ள அலுவலக தகவல் பலகையில் விளம்பரப்படுத்த தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தினை முழுமையாக பூர்த்தி செய்து 31.01.2024க்குள் கீழ்கண்ட முகவரிக்கு நேரடியாக அனுப்பிவைக்க அனைத்து வகை தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முகவரி : இயக்குநர்
பள்ளிக் கல்வி இயக்ககம்
பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகம்
கல்லூரி சாலை, சென்னை 600 006

மேலும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் போது கீழ்கண்ட குறிப்புகளை ஆசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

1. விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் / பணிபுரியும் / ஓய்வு பெற்ற / பணியிலிருந்து இறந்த ஆசிரியரின் ஒரு குழந்தைக்கு ஒரு முறை மட்டும் கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.
2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் (MBBS, BDS, BVSc., BE, B.Sc.(Agri), B.Sc.(Nursing), Bachelor of Law and three years Diploma Course) பயிலும் மாணவர்களுக்கு கல்வி கட்டணத் தொகை வழங்கப்படும்.
3. மனுவில் உள்ள அனைத்து கலங்களும் முழுமையான அளவில் சரியாக தமிழில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.(பணிபுரியும் பள்ளி, முகவரி பின் கோடுடன் இருத்தல் வேண்டும்).
4. பெற்றோர்களின் ஆண்டு மொத்த வருமானம் ரூ.7,20,000/- மிகாமல் இருத்தல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி நாள் 31.01.2024
6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஆசிரியர்கள் நேரடியாகவோ அல்லது பதிவு அஞ்சல் மூலமாகவோ இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்ககம், பேராசிரியர் க.அன்பழகன் கல்வி வளாகம், கல்லூரி சாலை, சென்னை.6 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
7. தொழிற்கல்வி படிப்பில் கடைசியாக தேர்வெழுதிய மதிப்பெண் சான்றிதழ் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். அவ்வாறின்றி பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. தந்தை அல்லது தாய் ஆசிரியராக பணிபுரிந்தால் / பணிபுரிந்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். மேலும், தந்தை அல்லது தாய் பணியின் விவரம் மற்றும் அவர்களின் ஊதிய சான்று விபரங்களை கண்டிப்பாக விண்ணப்பத்தில் உள்ள கலத்தில் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
9. ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் / இறந்து போன ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு இப்படிப்புதவித் தொகை பெற தகுதியுள்ளவர்கள் ஆவார்கள்.
10. ஆசிரியரல்லாத பணியாளர்கள் விண்ணப்பிக்கக் கூடாது.
11. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் விண்ணப்பிக்க கடைசி தேதியான 31.01.2024க்கு பின் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்கப்படமாட்டாது.

இணைப்பு : அரசாணை நகல் / படிவம்

12/1/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

12/1/24

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அரசு / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.